[1975 மார்ச் 27

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, 75 இலட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரித்திருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது மலையை ரோஸ்ட் சென்டராக்குவதற்கு நடமுடைய அரசு முயற்சி எடுத்துத் திட்டம் மத்திய அரசுக்குப் போயிருக்கிறதென்று சொன்னார்கள். அந்த எஸ்டிமேட்டுக்கு மத்திய அரசின் அப்ரூவலை விரைவில் பெற்று 1976-ஆம் ஆண்டிற்குள்ளாக அந்த வேலையை முடிக்க நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த வேலைகளை எடுத்துக்கொள்வது என்று அனுப்பப்பட்ட திட்டங்களில் முதல் எண் கொடுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத்திற்கு ஆகும் பாதை அமைப்பதற்கும், நிச்சயமாக ரோஸ்ட் சென்டராக்கு வதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஜவ்வாது மலைப் பகுதியில் இருக்கும் மலைவாசி மக்களுக்கு வேறு போக்குவரத்து வசதி இல்லாத தால், இதைக் கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறோம்.

வெள்ளித் திருப்பூரில் புதிய அணை

*465 வினா.—திரு. எ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பவானி வட்டத்தில் உள்ள வெள்ளித்திருப்பூர் கிராமத்தில் அணைகட்டும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 15·36 லட்சம். பயன்பெறும் நிலப்பரப்பு 332 ஏக்கர்கள். எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற் பத்தி 263 டன்கள் ஆகும்.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவர் அவர்களே, இந்த அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வருகிறார்கள். ஆகவே, இதை விரை விலே நிறைவேற்றி முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற் கெனவே இருந்துவந்த உத்தரவுப்படி இது சிக்கனமற்ற ஒரு திட்டமாகும். நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சரவர்கள் தெரிவித்ததற்கேற்ப பின் தங்கிய பகுதி என்று எடுத்துக்கொண்டால் இது சேருமா என்று பார்த்து, அரசின் நிதி நிலை அனுமதிக்குமானால் இதைப்பற்றி ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.